**தேசிய கல்வி நிறுவகம் - 2014**

தேசிய கல்வி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கல்வி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சலினை பிரதிபலிக்கும் வகையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் நிறுவகத்திற்கு அரச மானியங்களின் கீழ் நிதி அல்லாத சொத்தொன்றாக பெறப்பட்ட ரூபா 8,500,000 பெறுமதியான வாகனத்தின் பெறுமதியானது காசுப்பாய்சலொன்றாக கருதப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு கிரயம் மற்றும் தேறிய இற்றைப் பெறுமதி ஆகிய இரு பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு கணிப்பிடப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ரூபா 21,227,878 வெளிப்படுத்தப்பட்ட இருப்பினுள் ரூபா 3,537,939 இலாபம் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் இருப்பு அத் தொகையால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்ளைகள்

நிலையான சொத்து விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் ஆண்டுக்கான இலாபத்துடன் சீராக்கம் செய்யப்பட வேண்டுமெனினும், நிறுவகத்தின் நிலையான சொத்துக் கைத்தவிர்ப்பு மூலம் ஏற்பட்ட இலாபம் கைத்தவிர்ப்பு இலாப நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் அதன் மீதி ரூபா 3,640,844 ஆக இருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கட்டளையிடுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 31,569,002 பெறுமதியான பொருட்களின் கிரயமானது அட்டுறு செலவினம் மற்றும் வழியிலுள்ள இருப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள 04 நிலையான சொத்துக் கணக்குகளின் மீதிகளை குறித்த படடோலைகளுடன் இணக்கம் செய்த போது ரூபா 5,390,441 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

நிறுவகத்தின் கடன்பட்டோர் மீதியினுள் 06 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் 05 கடன் மீதிகளின் கூட்டுத்தொகையானது ரூபா 3,747,754 ஆகும். இதற்காக போதிளவிலான ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 | (i) செயல்நிமித்த உப கட்டுநிதியானது அது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டுமெனினும் தேசய கல்வி நிறுவகத்தினால் 17 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 649,150 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதியினை தீர்ப்பனவு செய்தல் 01 முதல் 10 மாதங்கள் வரையான காலதாமதத்திற்கு உட்பட்டிருந்தது. |
| | (ii) செயல்நிமித்த உப கட்டுநிதியினை ரூபா 20,000 எல்லையினுள் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமெனினும், திறைசேரியின் அங்கீகாரமின்றி நிறுவகத்தினால் அவ் எல்லையினை விஞ்சி செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்ததுடன் 32 பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கட்டுநிதி வழங்கிய போது 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான உச்ச மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 1,178,750 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i). IV அத்தியாயத்தின் 3.3 பிரிவு | நிரந்தர ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடமொன்றை நிரந்தர அடிப்படையில் நிரப்பும் வரை அமைய உத்தியோகத்தரொருவர் அப்பதவிக்கு ஆட்சேர்க்கப்பட கூடாதெனினும், அதற்கு முரணாகவும் கட்டுப்பட்டுச் சபையின் அங்கீகாரத்தினை முறையாகப் பெற்றுக்கொள்ளாமலும் நிறுகத்தின் வெற்றிடங்களுக்காக துண்டுக் கூலி அடிப்படையில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த 28 உத்தியோகத்தர்களின் சேவை 2013 ஆம் ஆண்டிலிருந்து சேவை நிரந்தரமாக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii). IV அத்தியாயத்தின் 3.3 ஆம் பிரிவு | ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க சேவை அனுபவம் இல்லாத ஒருவர் 2012 பெப்ரவரி 21 ஆம் திகதி பயிற்சி அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு பின்னர் 2013 திசெம்பர் 07 ஆம் திகதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் நிறுவகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். 09 மாதங்கள் கடந்த நிலையில் பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்காக பத்திரிகை அறிவித்தலொன்று 2014 செப்தம்பர் 02 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்ததுடன் பதவிக்காக மிகவும் உயர்ந்த தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் முறையான ஆட்சேர்ப்பொன்றினை மேற்கொள்வதில் நிறுவகம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 59,317,999 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 36,496,150 ஆகக் காணப்பட்டது. இதன் படி நிதி விளைவுகளில் ரூபா 22,821,849 தொகையான சாதகமான நிலை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இம் முரணிற்கு உள்நாட்டு வைப்பு வருமானம் ரூபா 117,128,348 ஆல் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

### 3.2 நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் கல்விசார் நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்ற உடன்படிக்கையை மீறிய 06 உத்தியோகத்தர்களுக்கு எதிராக ரூபா 12,215,387 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி நீதிமன்றங்களில் 06 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், அவற்றில் ஒரு வழக்குத் தீர்ப்பின் பின்னர் ரூபா 14,604 படி ரூபா 876,236 பெறுமதியான 60 தவணைகளில் செலுத்தி முடிப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது.

(ஆ) ஒழுக்கக்கேடான நடத்தையின் காரணமாக சேவையிலிருந்து பதவியிறக்கப்பட்ட 04 நபர்களால் ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் நிறுவகத்திற்கெதிராக நீதிமன்றங்களில் 04 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய கல்வி நிறுவகம் தாபிக்கப்பட்டிருந்த ரூபா 78,600,000 பெறுமதியான 7.0958 ஹெக்டேயர் அளவான தென்னகெலே வத்த காணி மற்றும் மீபே ஆசிரியர் பயிற்சி நிலையம் தாபிக்கப்பட்டுள்ள ரூபா 65,000,000 பெறுமதியான பதுவத்த

(கஹட்டஹேன) காணி என்பவற்றை நிறுவகத்திற்கு முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மலசல கூட கட்டமைப்பொன்றினை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடொன்றினைத் தயாரிப்பதற்காக மதியுரை கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு, மதியுரைக் கட்டணமாக ரூபா 1,200,949 தொகை செலுத்தப்பட்டு 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக் கொடுப்பனவினை கணக்குகளில் பதிவழிப்பதற்கு தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

**4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் தரம் 06 முதல் தரம் 10 வரையான பாடசாலை பாடதிட்டத்திற்கு இணங்கும் வகையில் ஆசிரியர்களுக்கான கணிப்பீட்டு உபகரணங்களாக 124,000 நூல்கள் அச்சிடப்பட்டிருந்ததெனினும் கணக்காய்வு திகதியாகிய 2014 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் 27 பாடங்களுக்குரிய ரூபா 5,873,491 பெறுமதியான 81,416 நூல்களை ஆசிரியர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஒக்தோபர் மாதம் தரம் 06 இற்காக அச்சிடப்பட்ட 18 பாடங்களுக்குரிய 43,979 ஆசிரியர் வழிகாட்டி கைநூல்களில் ரூபா 6,591,677 பெறுமதியான 36,308 ஆசிரியர் வழிகாட்டி கைநூல்கள் அல்லது 82 சதவீதம் 04 வருடங்களாக ஆசிரியர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டு முதல் தரம் 06 இற்குரிய பாடத்திட்டம் திருத்தப்பட்டமையின் காரணத்தால் இந் நூல்கள் பாவனைக்குட்படுத்தப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவகத்தின் தேவைப்பட்டிற்கமைய முன் அனுமதியின்றி பணிப்பாளர் நாயகத்தின் வாய்மொழிமூல ஆலோசனைகளின் அடிப்படையில் அவசர அத்தியாவசிய கொள்வனவொன்றாக குறிப்பிடப்பட்டு நேரடி கொள்வனவின் கீழ் மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தில் ரூபா 2,195,200 தொகை செலவிடப்பட்டு 400 விரிவுரை மண்டப கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு பல்வேறு பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததெனினும் முறையான பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அறிவுக்கூடத்தின் அடிப்படையில் பாடசாலை கல்வி முறைமையினை மீள் வடிவமைக்கும் செயற்திட்ட நிதியத்தினை (TESP) பயன்படுத்தி அந் நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக பின்வரும் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(அ) பணம் அறவிடப்பட்டு நடாத்தப்படும் பல்வேறு பட்டப் பாடநெறிகளுக்காக வழங்கப்படுகின்ற 8,000 சான்றிதழ் பத்திர குழல்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தில் ரூபா 1,315,130 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அதிபர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றில் பகிர்ந்தளிப்பதற்கு மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தில் 1,000 தரவு களஞ்சியங்களை (Pen Drive) கொள்வனவு செய்வதற்காக ரூபா 703,800 செலவிடப்பட்டமை.

**4.4 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 8,750,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் எதுவித ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும் நிதியானது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்து பரீட்சை சான்றிதழ் பத்திரங்களுக்காக பொதுவான சான்றிதழொன்றினை அச்சிடுவதற்கு அச்சகத்திற்கு வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் அச்சிடப்பட்ட வழுக்களடங்கிய மாதிரி சரியானதென நிறுவகத்தின் பணிப்பாளரொருவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 1,450 சான்றிதழ் பத்திரங்களின் அச்சிடலுக்காக ரூப 85,112 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 652 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 462 ஆகவும் இருந்தமையால் 190 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேவைப்பாட்டின் அடிப்படையில் அவசியமான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

நிறுவகத்தின் திருத்தப்பட்ட பாதீடு கணக்காண்டு முடிவடைந்து 04 மாதங்கள் கடந்த நிலையில் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் கீழ் கணக்காய்விற்கு 2015 மே 08 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட பாதிடப்பட்ட செலவினங்களை உள்ளவாறான செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 24 சதவீதம் முதல் 101 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

**5.2 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது 2009 யூன் 01 ஆம் திகதிய 30 (I) மற்றும் 30 (II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் பதவிநிலை தவிர்ந்த மற்றைய உத்தியோகத்தர்களின் வேதனங்களை மாற்றிய போது 29 உத்தியோகத்தர்களுக்காக 2009 சனவரி 01 முதல் 2014 ஏப்ரல் 30 வரை ரூபா 1,209,220 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் ரூபா 156,684 தொகையான ஊழியர் சேமலாப நிதி அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக முன்னைய ஆண்டின் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்ததெனினும் அதனை 2015 யூன் 22 ஆந் திகதி வரையிலும் செம்மைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஆ) கல்வி வெளியீடுகளை பகிர்ந்தளித்தல்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கணக்கீடு
(உ) கொள்வனவு நடைமுறை
(ஊ) இருப்பு கட்டுப்பாடு